# இஸ்லாத்தை புறக்கணித்ததால் உலகம் இழந்தது என்ன?

நன்றி : விடியல் வெள்ளி, (நவம்பர், டிசம்பர் 2004

அமெரிக்கா - பிரிட்டன் - இஸ்ரேல் இவை மூன்றும் இன்றைய உலகில் தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டிட அநியாயங்களைக் கட்டவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கின்றன. இதற்காக ஒரு பெருந்தொகை ஒதுக்கப்பட்டு விட்டது. இதற்கான படை பலமும் திரட்டப்பட்டு விட்டது. இதற்கான திட்டம் வெகு நாட்களுக்கு முன்னரே தீட்டப்பட்டு விட்டது. பணபலம், படைபலம், அறிவு பலம் அனைத்தும் இந்த மூன்று சக்திகளும் விரும்பிய அளவில் விரும்பிய விதத்தில் செலவிடப்பட்டு வருகின்றன. வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் இந்த உலகிலுள்ள ஏனைய நாடுகளின் உதவியையும் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்கின்றன இந்த மூன்று நாடுகளும். இவர்களின் இந்த ஆதிக்கத் திட்டத்திற்கு துணை போவோர் ஏராளம்! அதில் பல முஸ்லிம் நாடுகளும் உண்டு. தருணம் வரும் போதெல்லாம் ஐக்கிய நாடுகளின் சபை என்ற ஐ.நா. சபையையும் நாம் மேலே சொன்ன மூன்று நாடுகளின் அணி செயல்படுத்திக் கொள்கின்றது.

மேலே நாம் குறிப்பிட்ட மூன்று அணிகளுடன் புதிய பலம் ஒன்றும் இணைந்துள்ளது; அதுதான், பத்திரிக்கை உலகம். இவர்களின் உலக ஆதிக்க ஆசைக்கு பத்திரிக்கை உலகம் இப்போது பயன்படுவதை போல் இதற்கு முன்னால் எந்த ஆதிக்க சக்திக்கும் (பத்திரிக்கை பலம்) பயன்படவில்லை. இந்தப் பத்திரிக்கை உலகைத்தன் வயப்படுத்தவும் அமெரிக்கா அதிகமானதொரு தொகையை அள்ளிச் செலவிட்டிருக்கின்றது. உலகிலுள்ள எல்லா முன்னணி பத்திரிக்கையைச் சார்ந்த எழுத்தாளர்களையும் அமெரிக்காவுக்கு அழைத்து, அழகிய உபசரணைகள், சுற்றுலாக்கள் - அதீதமான பயிற்சிகள் - இஸ்லாத்தை எப்படி தீவிரமான கொள்கையாகவும், முஸ்லிம்களை தீவிரவாதத்தின் பிரதிநிதிகளாகக் காட்டிட வேண்டும் என்பதற்கான பயிற்சிகளும் தரப்படுகின்றன. இப்படி இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் தீவிரவாதிகளாகக் காட்டி அழித்திடும் உலக மகா போர் ஒன்று நடந்து கொண்டிருக்கின்றது.

**இந்தப் போரில் ஒரு புதிய படித்தரம் என்னவெனில், முஸ்லிம்களுள் ஒரு அணியினரையே இந்தப் போருக்குப் பக்கதுணையாக இணைத்துக் கொண்டதுதான்.**

இந்தப் பெரும்போரில் பெரும் எதிரியாகவும் ஒரே எதிரியாகவும் காட்டப்படுபவர்கள் முஸ்லிம்கள். இஸ்லாத்தை வேறு, வேறு காரணங்களுக்காக எதிர்ப்பவர்களும் இந்த அணியில் இப்போது தங்களை இணைத்துக் கொண்டுள்ளார்கள்.

இப்படி இவர்கள் இஸ்லாத்தைத் தீவிரவாதம் என்ற முத்திரைக்குத்தி பின்னுக்குத்தள்ளிவிடுவதால் இவர்கள் மட்டுமல்ல, அதாவது இந்த ஆதிக்க சக்திகள் மட்டுமல்ல, இந்த உலகமே பல்வேறு இழப்புகளுக்கு ஆட்பட்டு வருகின்றது. இஸ்லாத்திற்கெதிரான இந்தப் போர் தொடரும் வரை இழப்புகள் தொடரும். இந்த இழப்புகளைச் சுருக்கமாக எடுத்துச் சொல்வதே இந்தக்கட்டுரை. அல்ஹம்துலில்லாஹ்.

இஸ்லாத்தின் கொள்கைகள் இந்த உலகில் அறிமுகமாவதற்கு முன்னாலுள்ள காலகட்டத்தை அறிஞர் பெருமக்கள், ஐய்யாமுல் ஜாஹிலிய்யா என வழங்குவது வழக்கம். அதாவது அறியாமை இருள் மண்டிக்கிடந்த காலகட்டம். அந்தக் காலகட்டம் எத்துணை சிக்கல் நிறைந்ததாக இருந்தது என்பதை இந்த நூற்றாண்டின் இணையற்ற இஸ்லாமிய அறிஞராக இருந்து, வாழ்ந்து, மறைந்த அலீ மியான் என்ற அபுல் ஹஸன் அலீ நத்வீ(ரஹ்) அவர்கள் இப்படிக்கூறுகிறார்கள்.

இஸ்லாம் பின்னுக்குத் தள்ளப்படுவதால் அல்லது இஸ்லாம் தீவிரவாதம் என முத்திரைக் குத்தப்பட்டு மக்கள் மன்றத்திலிருந்து புறம் தள்ளப்படுவதால், ஏற்படப்போகும் முதல் இழப்பு - மனிதர்கள் அனைவரும் சமம் என்ற தத்துவம் மண் மூடிப்போகும்.

ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை அமெரிக்கர்களின் தலைமையிலான அணியால் ஏற்றுக்கொள்ள இயலாது. அங்கே நிறவெறி அந்த அளவிற்கு தலைக்குமேல் ஏறி நிற்கிறது. அவர்களின் அதிகாரம் குடியிருக்கும் மாளிகைக்குப் பெயரே வெள்ளை மாளிகைதான். இதனை அன்றே விவாதத்திற்கு உள்ளாக்கி அங்கே வெள்ளையன் ஒருவனைத் தவிர யாரும் அதிபராக அமர இயலாது என்பதைத் தெளிவுபடுத்தி இருக்கின்றார்கள். அமெரிக்காவில் வாழும் இலட்சக்கணக்கான கறுப்பர்கள், இன்றளவும் சமத்துவம் வேண்டி தவம் கிடக்கின்றார்கள். ஆனாலும் அவர்களுக்கு சமத்துவம் கிடைப்பதில்லை.

1776ம் ஆண்டு அதாவது இன்றிலிருந்து சுமார் 228 வருடங்களுக்கு முன்னால் அமெரிக்காவில் ஓர் அதிசய அறிவிப்பு. அதன் பெயர் அமெரிக்க விடுதலைப் பிரகடனம். Declaration of Independence 1776. (விடுதலைப் பிரகடனம் 1776). இந்த விடுதலைப் பிரகடனம் இப்படிக் கூறுகின்றது :

**“பிறப்பால் எல்லா மனிதர்களும் சமமானவர்கள்”. *(All Men are Born Free)***

அமெரிக்கா பிரித்தானிய ஆங்கிலேயர்களின் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்ட போது அறிவிக்கப்பட்டதே இந்த விடுதலைப் பிரகடனம். இந்த விடுதலைப் பிரகடனம் எப்படி செயல்பட்டது என்பதை 1932களில் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இப்படிக் குறிப்பிடுகிறார்கள் :

**“பிறப்பால் எல்லா மனிதர்களும் சமமானவர்கள்; ஆனாலும் அங்கே நீக்ரோக்கள் - அடிமைகள் மிகவும் குறைந்த அளவு உரிமை உள்ளவர்கள். அவனது அடிமைத்தனம் என்று ஒழியும்? அமெரிக்காவுக்கென எழுதப்பெற்ற புதிய அரசியல் சாசனச் சட்டத்தில் அவனுக்கு என்ன இடம்?... அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டது. ஆனால் (நிறவெறி) கறுப்பர்கள் பிரச்சனை அமெரிக்காவில் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது”.**

நேரு அன்று எழுதிய அதே நிலைதான் இன்றளவும். இஃது மட்டுமல்ல. அமெரிக்காவுக்கு பிரிதொரு வரலாறும் உண்டு. அந்த வரலாறு, இந்த நிறவெறிக் கொடுமைகளுக்கெதிராகப் போராடிய அனைவரும் சுட்டுக்கொல்லப்பட்டே இறந்தார்கள். **ஆபிரஹாம் லிங்கன், ஜான் எஃப் கென்னடி, மார்ட்டின் லூதர் கிங், மால்கம் X.** இந்தக் கொலைகளைச் செய்தவர்கள் வேறு யாருமல்ல, அமெரிக்காவின் உளவுத்துறைதான். ஆகவேதான் அடித்துக் கூறுகிறோம்; அமெரிக்கா ஆதிக்க சக்தியானால் அது வெள்ளையர்களின் ஆதிக்கம் என்றே நிலைபெறும். உலகத்தில் ஒரு பெரும்பான்மையினர் நிரந்தரமாக அடிமையாய் வைக்கப்படுவார்கள். இஸ்லாத்தைப் பின்னுக்குக்

தள்ளிவிட்ட காலங்களில் இதுதான் நடந்தது. இனி தீவிரவாதம் என இஸ்லாத்தை அவர்கள் புறம் தள்ளிவிட்டால் நடக்கப் போவதும் இதுவே! இந்தப் பேரழிவிலிருந்து உலகைக் காத்திட இந்த அமெரிக்காவின் தலைமையில் வரும் ஆதிக்க சக்திகளுக்கு அணை போடுவது அனைவர்மீதும் கடமையாகும்.

இந்தியாவில் இஸ்லாம் தாக்கப்படுவதற்கு - முஸ்லிம்கள் தீவிரவாதிகளாகச் சித்தரிக்கப்படுவதற்கு மிக முக்கியமானதோர் காரணம், இஸ்லாம் சொல்லும் அனைவரும் சமம் என்ற கொள்கை, இங்கேயுள்ள அடிமைத்தனத்திற்கும் தீண்டாமைக்கும் மிகப்பெரிய அடியாக அமைவதுதான். இதனை மிகப்பெரிய தலித் சிந்தனையாளர்கள் இப்படிக் குறிப்பிடுகிறார்கள் :

“1989களில் இஸ்லாத்தை அடிப்படையாகக் கொண்டு உலக அரங்கில் ஏற்பட்ட புரட்சி; அதை அடுத்து சில முஸ்லிம் நாடுகளில் அமைந்த இஸ்லாமிய குடியரசு. இவை அனைத்தும், இஸ்லாம் உலக அரங்கில் ஓர் அரசியல் கொள்கையாக மீண்டும் தலையெடுத்து விட்டது என்பதைப் பறையறிவித்தது. இது கண்டு அஞ்சி, இஸ்லாம் மீண்டும் ஓர் அரசியல் கொள்கையாக தழைத்து விடாமல் தடுக்க திட்டம் தீட்டியுள்ளார்கள், இந்த உலகில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றவர்கள்.

இஸ்லாம் வட்டியைத் தடுக்கின்றது - எதிர்க்கின்றது. அது போலவே மனிதன் மீது மனிதன் ஆதிக்கம் செலுத்துவதையும் அடிமைப்படுத்துவதையும் எதிர்க்கின்றது.

ஒரு மனிதனை இன்னொரு மனிதன் சுரண்டுவதையும், ஒரு நாட்டை இன்னொரு நாடு சுரண்டுவதையும் இஸ்லாம் தடுக்கின்றது, மறுக்கின்றது, எதிர்க்கின்றது. வட்டி, சுரண்டல் போன்ற அநீதிகளை எதிர்க்க என்ன விலை தந்திடவும் இஸ்லாம் தயங்குவதில்லை.

வட்டி, அடுத்த நாடுகளைச் சுரண்டி வாழ்வது ஆகியவற்றையே (அடிப்படை) ஜீவாதாரமாகக் கொண்டு வாழும் முதலாளித்துவ நாடுகளால் இஸ்லாம் ஓர் அரசியல் சக்தியாய் உருவாவதைப் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. ஆகவே ஈரானில் ஏற்பட்ட இஸ்லாமிய அரசு கண்டு வெதும்புகின்றார்கள். அன்று அரேபியாவில் இறைவனின் திருத்தூதர் அவர்கள் வட்டி, சுரண்டல், ஆதிக்க ஆணவம் இவற்றிற்கெதிராகத்தான் போராடினார்கள். இவை கிஞ்சிற்றும் இல்லாத ஓர் சமுதாயத்தை அமைத்தார்கள்.

இஸ்லாம், மக்கா வாழ் மக்களிடம் குடிகொண்டிருந்த பணத்திமிர், இனத்திமிர், ஆதிக்கத்திமிர் அனைத்தையும் நொறுக்கி அவர்களைப் பண்புமிக்க மனிதர்களாக மாற்றிற்று.

ஈரானில் ஆட்சியில் அமர்ந்த இஸ்லாமிய அரசையும், அதன் மூலம் இஸ்லாம் உலகில் ஓர் அரசியல் கொள்கையாக மீண்டும் வளருவதையும் முதலாளித்துவ நாடுகளால்தான் பொறுத்துக் கொள்ள இயலவில்லை என்றால், கம்யூனிஸ நாடுகளாலும் அதைப் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. குறிப்பாக ரஷ்யாவால் இதைத் தாங்கிக் கொள்ளவே இயலவில்லை. ஏனெனில் ரஷ்யா ஏராளமான முஸ்லிம்களைத்தான் தன் அடி வயிற்றில் கட்டிக் கொண்டு வாழ்கின்றது. அந்த முஸ்லிம்கள் நிமிர்ந்தால் அது நிமிடத்தில் இஸ்லாத்தின் பிடியில் வந்துவிடும். இப்படி இஸ்லாத்தைக் கண்டு வல்லரசுகளே அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கும்போது, இங்குள்ள இந்து வெறியர்களுக்கும் அது

குளிரைக் கொடுத்து நடுங்க வைப்பதில் ஆச்சர்யமில்லை.

இந்த இந்தியாவில் வாழும் இந்து வெறியர்கள், இஸ்லாம், தலித் மக்களின் விடுதலைக்கான ஒரே மார்க்கமாகவும் ஏனைய பிற்படுத்தப்பட்ட மக்களின் இரட்சகனாகவும் இந்தியாவுக்குள் தலை நிமிர்ந்து நின்றுவிடும் என்று அஞ்சுகின்றார்கள். குறிப்பாக இஸ்லாத்தின் சமூகநீதி, ஆட்சியில் ஏறி அமுலுக்கு வரும் போது இந்தியாவில் தாண்டவமாடும் ஜாதி வேற்றுமையை உடைத்தெறிந்து அனைவரையும் சமமாக்கி விடும். இந்த சமத்துவத்தால் கவரப்படும், தலித் மக்களும் பிற்படுத்தப்பட்ட மக்களும் இஸ்லாத்தில் இணைந்திடுவார்கள். இங்குள்ள இந்துக்களால் ஜாதி அமைப்பில்லாத ஒரு சமுதாயத்தை நினைத்துக்கூட பார்க்க முடியாது.

இந்தியாவுக்குள் வந்த கம்யூனிஸத்தின் மேலும் ஜாதி அமைப்பு ஏறி அமர்ந்து கொண்டது. ஆகவே இந்தியாவில் இஸ்லாம் முதலாளித்துவவாதிகளாலும், கம்யூனிஸ வாதிகளாலும், வகுப்புவாதிகளாலும் நிச்சயமாகத் தாக்கப்படும். இஸ்லாம் ஓர் அரசியல் கொள்கையாகத் தலையெடுப்பதை முளையிலேயே கிள்ளி எறிந்திட ஒரு பெரும் முயற்சி செய்யப்பட்டு வருகின்றது. ஆதலால்தான் இன்று இந்தியாவில் முஸ்லிம்களைக் கண்டால் வெட்டுவோம், விரட்டுவோம் என்றெல்லாம் கோஷமிடுகின்றனர். திருடர்கள் தங்கள் நிழலைக் கண்டு நிலை நடுங்குகின்றார்கள்.**ம**அடிப்படையில் மனித இனத்திற்கு வரவிருக்கும் அடுத்த இழப்பு, இறைவன் இந்த உலக மக்களுக்கு வகுத்து வழங்கிய இறை வழிகாட்டுதல்கள் மறைக்கப்பட்டு விடும்.

மனிதனைப் படைத்த இறைவன், அவன் இந்த பூமியில் எப்படி வாழ்ந்திட வேண்டும் என்பதற்கான வழிகாட்டுதல்களையும் இணைத்தே வழங்கினான். உலகம் தோன்றிய நாள்முதல் இந்த வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் மனிதன் அவற்றை அவ்வப்போது புறக்கணித்தே வந்துள்ளான். எனினும் இறைவன் மீண்டும், மீண்டும் இறைத்தூதர்களை அனுப்பிக்கொண்டே இருந்தான். ஆனால் மனிதனோ அவற்றை சிலகாலம் பின்பற்றுவதும் பின்னர் அவற்றைப் புறக்கணித்து விடுவதாகவுமே வாழ்ந்து வந்தான். இவ்வாறு அனுப்பப்பட்ட இறைத்தூதர்களில் இறுதியாக அனுப்பப்பட்டவர்கள் தாம் முஹம்மது(ஸல்) அவர்கள். அவர்களின் வழி அருளப்பட்ட இறுதி வேதமே அல்குர்ஆன். இதுவே மனிதர்களுக்கு இறைவன் தேர்ந்தெடுத்து தந்த மார்க்கம். அதன் பெயர் தான் இஸ்லாம். இறைவன் கூறுகின்றான் :

> **“நான் உங்களுக்கு, உங்களுடைய மார்க்கத்தை இன்றைய தினம் பரிபூரணமாக்கி வைத்துவிட்டேன். உங்களுக்காக இஸ்லாம் மார்க்கத்தையும் தேர்ந்தெடுத்து உங்களுக்கு அருள் செய்து அங்கீகரித்துக் கொண்டேன்”.** ***அல்குர்ஆன் 5:3***

மனிதன் இந்த உலகில் எப்படி வாழ்ந்திட வேண்டும் என்பதை மட்டுமல்ல, மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கை எப்படி அமைந்திட வேண்டும் என்பதையும் இணைத்தே வழிகாட்டுகின்றது இஸ்லாம். இஸ்லாத்தைப் புறக்கணிப்பதன் மூலம் மனிதன் மிகப்பெரியதொரு வழிகாட்டுதலை இழந்து இருட்டில் சஞ்சரிக்கத் தொடங்கிவிடுவான். அதனால் விஞ்சப்போவது குழப்பங்களும் கொந்தளிப்புகளுமேயோகும். இஸ்லாத்தின் கையிலிருந்து உலக அதிகாரம் பறிக்கப்பட்ட நாள் முதல் இதுவே தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றது. இஸ்லாத்தின் கையிலிருந்து தலைமை பிடுங்கப்பட்டபோதெல்லாம் மனித இனம் இரு பெரும் பிரச்சனைகளில் சிக்கி இருக்கின்றது. ஒன்று இறைவன் இருக்கின்றானா? என்பது; இன்னொன்று அவன் ஒருவனா? பலரா? அல்லது

[illegible]
அதனை விஞ்சும் எண்ணிக்கையா? இவை ஒரு பெரும் சர்ச்சையாக ஆனது என்பது மட்டுமல்ல, இவை இரு அணிகளாகவே பிரிந்து உலகை அலைக்கழித்தன.

நபி(ஸல்) அவர்கள் இறைவனின் தூதராக அனுப்பப்படுவதற்கு முன்பும், அதாவது ஆறாம் நூற்றாண்டின் இறுதியிலும் இப்படித்தான் ஒரு குழப்பம் உலகில் நிலைநின்றது. அப்போது அருளப்பட்ட மார்க்கமாக - இறைவனின் வழிகாட்டுதலாக கிறிஸ்தவம் மக்களுக்கு நேர்வழி காட்டி இருக்க வேண்டும். ஆனால் அதுவே அப்போது அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. இன்றளவும் அந்த விவாதத்திலிருந்து அது தன்னை விடுவித்துக் கொண்டதாகத் தெரியவில்லை. ஆதலால் தான் கூறுகின்றோம் : இஸ்லாம் புறக்கணிக்கப்பட்டால் இறைவழிகாட்டுதல் மறைக்கப்பட்டே போகும். மனிதன் தன்னை படைத்தவனையே புறக்கணித்து விடுவான். இதனால் அவன் கோலற்ற குருடன் போல கொள்கையற்று வீழ்ந்து போவான். இஸ்லாத்தைப் புறக்கணிக்கும் போதெல்லாம் மனிதன் ஒரு தவறை தவறாமல் செய்வான். அது இந்த உலகமே சதம் என்ற மனப்பான்மையை வளர்த்துக் கொள்வான். இந்த உலகத்தை விஞ்சி எதுவுமில்லை என்ற முடிவுக்கு வருவான்.

இதனை இறைவன் இப்படிக் குறிப்பிடுகின்றான் :

> **“இவ்வுலகில் நாம் வாழ்ந்திருப்பதைத் தவிர (வேறு வாழ்க்கை) இல்லை. ஆகவே (இறந்தபின்) நாம் உயிர்ப்பிக்கப்பட மாட்டோம்”** என்றும் அவர்கள் கூறுகின்றனர். *அல்குர்ஆன் 6:29*

இப்படியொரு மனநிலையை அவன் வளர்த்துக் கொள்வதால் அவன், இந்த உலகில் கிடைப்பதையெல்லாம் அனுபவிக்கத் துடிக்கும் ஓர் மிருகமாகத் தன்னை மாற்றிக் கொள்கிறான். எங்கும் பணம் எதிலும் பணம் என்று இன்பங்களை மையமாக கொண்டு வாழ்ந்திட தலைப்படுகின்றான். இப்படித்தான் சம்பாதிக்க வேண்டும் என்ற வரையறைக்குள் அவன் நிற்பதில்லை. எப்படியேனும் சம்பாதிக்க வேண்டும் என்ற மனநிலையை வளர்த்துக்கொள்கின்றான். பொய், பித்தலாட்டம், ஏமாற்று, சூது இவையெல்லாம் அவன் சம்பாதிக்கும் பாதைகளாக மாறிவிடுகின்றன. சுரண்டல் மலிகின்றது. வர்க்கப் பேதங்கள் வளருகின்றன. பொறாமையும் போட்டியும் எழுகின்றது. அவை சமுதாயத்தில் சண்டைகளையும், வழக்குகளையும் மிகைப்படுத்துகின்றன. அவன் இவற்றில் எதைப்பற்றியும் கவலைப்படுவதில்லை. தன் சல்லாப வாழ்க்கையையே தேடி ஓடுகின்றான். மாத்தத்தில் மனிதன் மிருகமாக மாறிவிடுகின்றான். ஒரு காலகட்டத்திற்கு பின் அவனது பெற்றோர்களே அவனுக்குப் பெருஞ்சுமையாகப் படுகின்றார்கள். அவர்களை முதியோர் இல்லங்களை நோக்கி ஒட்டி விடுகின்றான். சமுதாயத்தில் அனைத்தும் இலாபம் அல்லது நஷ்டம் என்ற கணக்கிலேயே பார்க்கப்படுகின்றன. அன்பு, பாசம் இவை அரிதாய்ப் போய் விடுகின்றன.

மதுக்கடைகளும், விபச்சார கூடங்களும் அவனது உல்லாசபுரிகளாக மாறுகின்றன. இந்த உல்லாசபுரிகளில் சஞ்சரிக்க இவர்கள் சில பலரது வாழ்க்கையையும் வளத்தையும் சூறையாடிட வேண்டியதிருக்கின்றது. இதைத்தான் இன்று உலகில் தலைமையை ஏற்கத் துடிக்கும் அமெரிக்கா செய்து கொண்டிருக்கின்றது. அன்று உலகில் அங்காடி தேடி வந்த ஆங்கிலேயர்கள் உலகில் ஒரு

பெரும் பகுதியை அடிமைப்படுத்தி அந்த மக்களின் உழைப்பையும் அந்த மக்களுக்குச் சொந்தமான இயற்கை வளங்களையும் அகழ்ந்து எடுத்துச் சென்றார்கள். அதே போல் தான் இன்று அமெரிக்கா உலகில் வளமான பகுதிகளை நோக்கி தன் ஆதிக்க ஆட்டத்தை நீட்டுகின்றது.

எந்த இஸ்லாம் இவர்களை இந்த மிருகத்தனங்களிலிருந்து விடுவித்து அன்பு, தர்மம் ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ்தல் என்பனவற்றை ஏற்படுத்தித் தந்திட இயலுமோ அந்த இஸ்லாத்தை இவர்கள் புறக்கணிப்பதால், தீவிரவாதம் என முத்தினரைக் குத்தி விடுகின்றார்கள். இதனால் இறைவழிகாட்டுதல்கள் இவர்களின் இதயங்களுக்குள் நுழைய முடியவில்லை. இவர்களைத்தான் இப்படிக் கூறுகின்றான்; திரும்ப முடியாத ஓர் இடத்தைச் சென்றடைந்து விட்டார்கள். இறைவன் கூறுகின்றான் :

> **"அவர்களுடைய இதயங்களின்மீதும், கேள்விப் புலன்கள்மீதும், அல்லாஹ் முத்திரையிட்டுவிட்டான். அவர்களுடைய பார்வைகளின் மீதும் திரையிடப்பட்டு விட்டது. தவிரவும் அவர்களுக்கு மகத்தான வேதனையும் உண்டு".** *அல்குர்ஆன் 2:7*

இஸ்லாம் இந்த உலகில் கோலோச்சிக் கொண்டிருந்த நாள்களில் அல்லது, இதையே வேறு சொற்களால் சொன்னால்,

இஸ்லாம் இந்த உலகை வழிநடத்திக்கொண்டிருந்த நாள்களில் மனிதனிடம் உலகெங்கிலும் ஓர் ஆன்மீகத் தேட்டம் இருந்து கொண்டிருந்தது.

உலகெங்கிலும் மனிதர்கள் உண்மையைத் தேடி ஓடிக்கொண்டிருந்தார்கள். நல்ல மனிதர்களைத்தேடி, அவர்கள் தரும் ஒழுக்கவிழுமங்களைத்தேடி வருவோரின் எண்ணிக்கை எண்ணிலடங்காத ஒன்றாக இருந்தது.

முஸ்லிம்கள் மட்டும்தான் இந்த நல்ல மனிதர்களின் இறையச்சம் - நல்லொழுக்கம் இவற்றால் கவரப்பட்டார்கள் என்றில்லை. மாறாக எல்லா மனிதர்களும் இவர்களால் கவரப்பட்டார்கள். பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற அடிப்படையில் பின்வரும், நிகழ்வை எடுத்துச் சொல்லலாம்.

ஆங்கிலேயர்கள் நம் நாட்டில் மெல்ல அடியெடுத்து வைத்து தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டிக் கொண்டிருந்த நாள்களில் ஒரு வேலையை அவர்கள் செய்தார்கள். நாடெங்கிலும் தங்கள் கலாச்சாரத்தின் அடையாளமான மதுக்கடைகளை திறந்து வைத்திருந்தார்கள். எல்லா தரப்பு மக்களும் ஒன்றுபோல் மதுவுக்கு அடிமையானார்கள். மது விற்பனை களை கட்டிப்பறந்தது. இந்நிலையில் அப்போதைய இந்தியாவின் தலைசிறந்த ஆன்மீகவாதியாகவும் இறையச்சத்தில் இணையற்று திகழ்ந்தவர்களாகவுமிருந்த செய்யத் அஹ்மத் ஷஹீத் அவர்கள் கல்கத்தா சென்றார்கள். இரண்டு மாதங்கள் அங்கே தங்கியிருந்து தனது அறிவுரைகளையும் - இஸ்லாத்தின் வழிகாட்டுதல்களையும் எடுத்துச் சொன்னார்கள். இருபது நாட்களிலேயே ஓர் மகத்தான மாற்றத்தை கல்கத்தா பெருநகர் சந்தித்து மது விற்பனை மிகப்பெரிய அளவில் பாதிப்புக்குள்ளானது. விற்பனை ஓர் முடிவுக்கே வந்து விட்டது என்கின்றார்கள். எந்த அளவுக்கு மது விற்பனை ஆட்டங்கண்டது என்றால், மது விற்பனை நஷ்டத்தில், இழப்பில் முடிந்தது.

இதனால் மதுக்கடைகளை நடத்திக் கொண்டிருந்தவர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்திடம், நாங்கள் அரசாங்கத்திற்கு ஒருபெரும் தொகையைச் செலுத்தித்தான் மதுக்கடைகளுக்கான உரிமத்தை பெறுகின்றோம். இந்த உரிமங்களுக்கு இப்போது எந்த மதிப்புமில்லை. மதுவின் விற்பனை குறைந்து போனது. இதற்குக் காரணம் கல்கத்தாவில் அண்மையில் வந்து தங்கி இருக்கும் ஓர் ஆன்மீகவாதிதான். அவரை கல்கத்தாவை விட்டு வெளியேற்றுங்கள் அல்லது எங்களுக்கு இழப்பீடு தாருங்கள் எனக் கேட்டிருந்தார்கள். இப்படி இஸ்லாம் அது வாழ்வாங்கு வாழ்ந்து கொண்டிருந்த நாட்களில் ஆன்மீக அறப்போதனைகளை தரும் மக்கள் உலகெங்கிலும் நடமாடிக்கொண்டே இருந்தார்கள். அவர்களால் சமுதாயத்தில் புரையோடிப் போயிருந்த பாவங்களும் தீமைகளும் ஒழிந்தன. இதனால் பலனடைந்தவர்கள் எல்லாதரப்பிலும் இருந்தார்கள். ஏற்கெனவே நாம் குறிப்பிட்டதைப் போல் பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதே இந்த நிகழ்வு. செய்யத் அஹ்மத் ஷஹீத் அவர்களைப் போல் ஏராளமான ஆன்மீகவாதிகள் உலகெங்கிலும் சஞ்சரித்து அறப் போதனைகளை அள்ளி வழங்கிக் கொண்டிருந்தார்கள்.

சமுதாயத்தின் அனைத்துத் தரப்பாரும் பாவங்களிலிருந்தும், தீமைகளிலிருந்து காப்பாற்றப் பட்டார்கள். இஸ்லாமிய அலை இந்த உலகிலிருந்து ஓய்ந்தபோது ஒழுக்கக் கேடுகள் ஒய்யாரமாய் ஓங்கி வளர்ந்தன. தீமைகள் எனவும், பாவங்கள் எனவும் கருதப்பட்டவை சமுதாயத்தில் நியாயப்படுத்தப்பட்டன. தீமைகளை நியாயப்படுத்திட அதீதமான காரணங்கள் சொல்லப்பட்டன. பின்னர் அவை அங்கீகாரம் பெற்றன. அதன் பின்னர் சமுதாயத்தில் அஃது அதிகாரம் பெற்றது. பின்னர் மக்கள் நலவாழ்வு ஒன்றே நமது குறிக்கோள் என்று அரசுகளே அவற்றை அங்கீகரித்தன. இப்படி அங்கீகாரம் பெற்றவை தான் விபச்சாரத்தை மையமாகக் கொண்ட சிவப்பு விளக்குப் பகுதிகள். விபச்சாரத்திற்கு தரப்பட்ட அங்கீகாரம் எய்ட்ஸ் என்ற ஆட்கொல்லி நோய் வரை கொண்டு சென்றது. இன்று ஒரு பெரும் மனித கூட்டம் இந்த ஒழுக்கக் கேட்டால் வாங்கிய நோயால் மரணத்தை நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்றது.

நல்ல இலட்சியத்திற்காக வாழ்ந்து கண்ணியமான மரணத்தை சந்திக்க வேண்டிய மனித சமுதாயம், ஒழுக்கக் கேட்டால் செத்து மடிகின்றது. இன்றைய உலகையாள வேண்டும் என்று துடிக்கும் அமெரிக்காதான், இது போன்ற ஒழுக்கக் கேடுகளின் உறைவிடம். இஸ்லாத்தின் ஒளி பாய்ந்திடத் தவறிய இடங்களிளெல்லாம் ஒழுக்க வீழ்ச்சி நிச்சயம்! உலகத்தலைமை இஸ்லாத்தின் கைகளிலிருந்து வீழ்ந்தபோது ஒழுக்கக் கேடுகள் எப்படி தலை விரித்தாடின என்பதை **லெக்கி** என்ற எழுத்தாளர் இப்படிக் குறிப்பிடுகின்றார்.

**“ஐரோப்பாவின் பிரகாசமான காலகட்டத்தில் ஒருபுறம் சந்நியாசமும், இன்னொருபுறம் காதல் களியாட்டங்களும் தொடர்ந்தன. அந்தக் காலகட்டத்தில் சமுதாய வாழ்வை அலங்கரித்தவை, ஒழுக்கத்தைப் பற்றி எந்தக் கவலையும்படாத ஓர் வாழ்க்கை வரலாற்றில் அதிகமான சந்நியாசிகளை உருவாக்கிய காலகட்டம்தான், அதிகமான விபச்சாரத்தையும் ஊட்டி வளர்த்தது”.**

தொடக்க காலத்தில் மக்கள் சந்நியாசத்தை நம்பத் தொடங்கினார்கள். அது போலியென தெரிந்த போது அவர்கள் கைபிசைந்து நின்றார்கள். இந்தச் சந்நியாசத்திற்கும் இறைவனின் உண்மையான வழிகாட்டுதல்களுக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை. இதே போல் ஐரோப்பா முழுவதும் கரை புரண்டோடிய ஒழுக்கக் கேடுகளுக்கும், விபச்சார நடவடிக்கைகளுக்கும் இறை

வழிகாட்டுதல்களுக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை. இப்படித்தான் சமுதாயம் சீரழிந்து கொண்டிருந்தபோது, இதனை நெறிப்படுத்திட ஓர் உறுதியான வழிகாட்டுதலை வாங்கிட இயலாத பரிதாப நிலைக்கு ஆளாகி நின்றது அன்றைய கிறிஸ்தவம்.

ஆக, ஒரு ஒழுக்க முறையை உலகம் பெற வேண்டுமானால் உண்மையான இறைவழிகாட்டுதல்களின் பக்கம் அஃது திரும்பிட வேண்டும். இன்றைய நிலையில் அந்த வழிகாட்டுதல் இஸ்லாத்திடம் மட்டுமே இருக்கின்றது. இஸ்லாம் கூறும் ஒழுக்க நெறிகள், இறைவனையும், அந்த இறைவன் ஏற்பாடு செய்துள்ள மறுமை என்ற மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கையையும் மையமாகக் கொண்டது. மனிதன் அனுதினமும் இறைவனின் கண்காணிப்பின் கீழ் இருக்கின்றான். அவன் துளி நிமிடம் கூட இறைவனின் பார்வைக்கு அப்பால் இல்லை என்ற மகத்தான தத்துவம் மிகவும் மறைவாகச் செய்யும் தீமைகளும் பாவங்களும்கூட இறைவனின் பார்வையிலிருந்து தப்பாது என்ற இறை உணர்வு மனிதர்களை தவறுகளைச் செய்வதிலிருந்து நிரந்தரமாகத் தடுக்கிறது.

இனி மனிதன் செய்யும் ஒவ்வொரு சிறுபாவங்களுக்கும் கூட அவன் இறைவனிடம் பதில் சொல்லியாக வேண்டிய நாள் ஒன்று உண்டு. அந்நாள் பற்றி இறைவன் இப்படிக் கூறுகின்றான் :

> **“ஆகவே, எவர் ஓர் அணுவளவு நன்மை செய்திருந்தாரோ அவர் (அங்கு) அதனையும் கண்டுகொள்வார்.**
>
> **(அவ்வாறே) எவன் ஓர் அணுவளவு தீமை செய்திருந்தானோ, அதனையும் அவன் (அங்கு) கண்டுகொள்வான்”.** ***அல்குர்ஆன் 99:7,8***

இந்த இறைவழிகாட்டுதலை - இந்த வாழ்க்கைநெறி, ஒழுக்க நெறியை தீவிரவாதம் என முத்திரை குத்தி விட்டால் மனிதன் பல இழப்புகளைச் சந்திப்பான். அதைப் போலவே நீதி பரிபாலனத்திலும் மிகப்பெரிய மாறுபாடுகள் வந்தன இஸ்லாத்தின் வீழ்ச்சிக்குப் பின்.

கறுப்பர்களுக்கொரு நீதி வெள்ளையர்களுக்கு ஒரு நீதி என்ற நிலை இருந்தது. ஆனால் இஸ்லாமோ நீதியை எல்லா நிலைகளிலும் நிலை நாட்டிடப் பணித்தது.

> **“விசுவாசிகளே நீதத்தை நிலை நாட்டுவதில், அல்லாஹ்வுக்காக நீங்கள் உறுதியான சாட்சிகளாக இருங்கள். மக்களில் ஒருசாரார்மீது(உங்களுக்கு)ள்ள துவேஷம், (அவர்களுக்கு) அக்கிரமம் செய்யும்படி, உங்களைத் தூண்டாதிருக்கவும். (எவ்வளவு குரோதமிருந்த போதிலும்) நீங்கள் நீதியே செலுத்துங்கள். அதுதான் பரிசுத்தத் தன்மைக்கு மிக நெருங்கியது. (எத்தகைய சந்தர்ப்பங்களிலும்) நீங்கள் அல்லாஹ்வுக்கே பயப்படுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிந்தவனாக இருக்கின்றான்”.** *அல்குர்ஆன் 5:8*
>
> **“ஆணோ, பெண்ணோ எவர் திருடினாலும் இ(த்தீ)ச் செயலுக்குத் தண்டனையாக அவர்களின் கைகளைத் துண்டித்து விடுங்கள்; (இஃது) அல்லாஹ்வினால் ஏற்படுத்தப்பட்ட எடுத்துக்காட்டான தண்டனையாகும். அல்லாஹ் மிகைத்தோனும் ஞானமுடை யோனுமாயிருக்கிறான்”** ***அல்குர்ஆன் 5:38***

இன்று ஆட்சியாளர்கள் தங்கள் விருப்பம் போல் நீதியை வளைத்துக் கொள்கின்றார்கள். அமெரிக்காவின் தலைமையின் படி ஆதிக்க சக்திகளோ தாங்கள் செய்வதை நியாயப்படுத்துகின்றனர். இல்லையேல் அப்படித்தான் செய்வோம் என்கின்றார்கள். இப்படியொரு நிலை எந்த நிலையிலும் இஸ்லாமிய சமுதாய அமைப்பில் இல்லை. உலக ஆதிக்கம் இஸ்லாத்தின் கைகளிலிருந்து பிடுங்கப்பட்ட பின்னரே இதுபோன்ற அடாவடித்தனங்கள் நடக்கத் தொடங்கின.

ஆழமான இறைநம்பிக்கை, நபிதுவத்தின் உறுதியான போதனை, அதிநுட்பமான வளர்ப்பு முறை, என்றும் அழியாத, நிலைத்த வான்மறை வசனங்கள் இவற்றால் இந்த மாற்றத்தை சாத்தியமாக்கினார்கள் நபி(ஸல்) அவர்கள். ஒவ்வொருவருக்கும் அல்லாஹ் வழங்கி இருந்த தனித்தன்மைகளை மௌட்டீகம் (ஜாஹிலிய்யத்) வீணடித்திருந்தது. தன்னிலைமறந்து மவுட்டீகத்தை ருசித்துக் கொண்டிருந்தவர்களிடம் அவர்களின் திறமைகளை வெளிக்கொண்டுவர நபி(ஸல்) அவர்கள் முயன்றார்கள்.

அந்த முயற்சியில் நபி(ஸல்) வெற்றிக்கனியைப் பறித்த போது ஒவ்வொருவரும் தாம் பிணமாக இருந்து உயிர் பெற்றது போல, குருடனாய் இருந்து விழிதிறந்தது போல் தம்மை உணர்ந்தனர். உமர்(ரழி) அவர்கள் முன்னர் தம் தந்தை ஹத்தாபின் ஒட்டகங்களை மேய்த்துக் கொண்டிருந்தார்கள். வீரத்துக்குப் பேர் போன குறைஷ் குலத்தில் பிறந்திருந்தாலும் அவர்களின் சிறப்பான அந்தஸ்து முழுமையாக உணரப்படாமலேயே இருந்தது.

பின்னாளில் அவர்கள் இறையச்சம், நீதி ஒழுக்கம் இவற்றாலும், சிறந்த நிர்வாகத் திறத்தாலும் ரோம, பாரசீக ஆட்சிகளையே நடுநடுங்க வைத்தார்கள். காலித்பின் வலீத்(ரழி) குறைஷ்களின் சிறந்த போர் வீரர். அவரது போர்த்திறன் குறைஷ்களின் குலப்பெருமையை நிலை நாட்டவே பயன்பட்டது.

அரபு தீபகற்பத்தின் ஓரங்களில் கூட பரவி இருக்காத அவரின் வீரம் உலக நாடுகள் முழுவதும் பரவியது. குலப்பெருமை என்ற கூட்டிலிருந்து வெளியேறி இஸ்லாமிய அறநெறியை ஏற்றபின் அல்லாஹ்வின் வாள் என்ற திருப்பெயரோடு அவரின் புகழ் பாரெங்கும் பரவிற்று.

அபூ உபைதா(ரழி) நேர்மை ஒழுக்கம் அமானிதம் பேணுதல் ஆகிய நற்பண்புகளோடு முஸ்லிம்களின் சிறு அணிக்கு தலைமையேற்றவர், பின்னாளில் ஹிர்கல் மன்னரை விரட்டியடித்தார். அம்ரு பின் ஆஸ்(ரழி) முன்னர் அபீசீனியா முஸ்லிம்களுக்கு அடைக்கலம் தந்த போது அவர்களை மீண்டும் மக்காவுக்கு அழைத்து வர குரைஷ்களின் தூதராகச் சென்று தோல்வியோடு திரும்பியவர். பின்னாளில் எகிப்து தேசத்தை வெற்றி கொண்டு இஸ்லாமிய அரசின் கவர்னராக திறம்பட நிர்வாகம் நடத்தினார்.

பாரசீக தேசத்தின் ஓர் கிராமத்தில் பிறந்து அடிமையாகவே வாழ்ந்து கொண்டிருந்து கடைநிலை வாழ்வையே அறிந்திருந்த ஸல்மான்(ரழி) இஸ்லாத்தை ஏற்றபின் அதே பாரசீக தேசத்தின் ஒரு பகுதிக்கு அதிகாரியாக ஆனார்கள். நீக்ரோ இனத்தின் பிலால்(ரழி)வை முஃமின்களின் தலைவரான உமர்(ரழி) எங்கள் தலைவர் பிலால் என்றார்கள். அபூஹுதைபா(ரழி) அவர்களின்

அடிமையாக இருந்த ஸால்ம்(ரழி) இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் தலைவராக வீற்றிருக்கும் தகுதியைப் பெற்று இலங்கினார்கள். உமர்(ரழி) கூறினார்கள், ஸாலிம் இப்போது உயிரோடு இருந்தால் அவரையே நான் ஆட்சித் தலைவராக தேர்ந்தெடுப்பேன்.

இதோ ஸைத்பின் ஹாரிதா(ரழி) என்ற ஓர் முன்னாள் அடிமை மூத்தா போரில் முஸ்லிம்களின் அணிக்கு தலைமை தாங்கிச் சென்றார். அவரின் மகன் உஸாமா(ரழி) அவர்களும் அபூபக்ர்(ரழி) உமர்(ரழி) போன்ற மூத்த முதுபெரும் நபிதோழர்களுக்குத் தலைமையேற்று படை நடத்திச் சென்றார்.

அபூதர்(ரழி) மிக்தாத்(ரழி) அபூதர்தா(ரழி) அம்மார் பின் யாசீர்(ரழி), முஆத் பின் ஜபல்(ரழி), உபய் பின் கஃபு(ரழி) போன்றோர் இஸ்லாத்தின் அருள் ஒளியால் குறிப்பிடத் தக்கவர்களாகவும் அதே நேரத்தில் அறிவில் தேர்ந்தெடுத்தவர்களாக அழகுறக் காட்சி தருகின்றார்கள். அலீ(ரழி) , ஆயிஷா(ரழி), அப்துல்லாஹ் பின் மஸ்வூத்(ரழி) எழுதப்படிக்கத் தெரியாத நபியின் மடியில் வளர்ந்த அறிவுச் சுரங்கங்கள், ஞானங்கள் இவர்களின் நாவுகளில் நடமாடின. இவர்கள் பேசத் தொடங்கினால் காலம் வாய்மூடிக் கொள்ளும். உரையாற்றினால் வரலாறு தன் எழுது கோலை மூடி வைத்துக்கொள்ளும்.

நபிதுவம் என்ற திறவு கோலால் மனிதத் திறமைகள் திறக்கப்பட்டன. இதனால் பென்னம் பெரும் அதிசயங்களை உலகம் கண்டது. அந்த வரலாற்று நாயகர்கள் மூலமாக மவுட்டீகத்தை, அது பேயாட்டம் போட்ட மண்ணிலேயே வீழ்த்தினார்கள். வீரர் நபி(ஸல்) அவர்கள் காலுக்கடியில் போட்டு மிதித்தார்கள் ஜாஹிலிய்யாவை.

*நன்றி : விடியல் வெள்ளி நவ., டிசம். 2004*

குறிப்பு : இஸ்லாத்தைப் புறக்கணிக்கும் செயலில் முஸ்லிம் அல்லாதவர்களைவிட முஸ்லிம்களே முன்னணியில் இருக்கிறார்கள் என்பதை மிக்க வேதனையுடன் சொல்லித்தான் ஆகவேண்டும். நபி(ஸல்) அவர்களது காலத்தில் ஜாஹிலிய்யா என்ற அறியாமையின் அதலபாதாளத்திலிருந்து அறிவின் உச்சிக்கே அந்த மக்கள் சென்று, இந்த உலகிலும் மறு உலகிலும் வெற்றி அடைந்ததற்கு ஒரே காரணம் அவர்கள் தங்கள் முன்னோர்களின் அடிச்சுவட்டில் செல்வதை விட்டும் மீண்டு இறைவனது இறுதி வேதம் அல்குர்ஆனைப் பற்றிப் பிடித்ததேயாகும்.

அதற்கு நேர்மாறாக இன்றைய முஸ்லிம்கள் அதே இறுதி வேதம் அல்குர்ஆனைப் பற்றிப் பிடிப்பதைப் புறக்கணித்து விட்டு, அறியாமைக்கால மக்கள் ஆரம்பத்தில் பற்றிப் பிடித்திருந்த முன்னோர்களின், மூதாதையர்களின் நடைமுறைகளைப் போன்று, இவர்கள் நம்பிக்கை வைத்துள்ள இமாம்கள், அவுலியாக்கள், பெரியார்கள், நாதாக்கள், ஸாதாத்துகள், அகாபிரீன்கள் போன்றவர்களின் பெயரால் கட்டி விடப்பட்டுள்ள கட்டுக் கதைகளைக் கண்மூடிப்பின் பற்றுகிறார்கள்.

அதனாலேயே இன்றைய முஸ்லிம் சமுதாயம் வீழ்ச்சியின் அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடக்கிறது. இதற்கு முழு முதல் காரணம் மார்க்க அறிஞர்கள் என்று தங்களுக்குத் தாங்களே பெயர் சூட்டிக் கொண்டு, தங்களுக்கே மார்க்கத்தில் அதிகாரம் உண்டு என்று மக்களை நம்ப வைத்துள்ள புரோகித வர்க்கமே. அவர்களே மக்களை இறைவனின் இறுதி வேதமான அல்குர்ஆனை விட்டுத்தூரப்படுத்தி வைத்திருக்கிறார்கள். அல்குர்ஆனை தொட்டுப் படிப்பதற்கும், அதை

விளங்குவதற்கும் இல்லாத சட்டங்களை எல்லாம் உண்டாக்கி மக்களை ஏமாற்றி வருகிறார்கள். இந்த இழிநிலை மாறவேண்டும். ஒவ்வொரு ஆணும், பெண்ணும் சுயமாக அல்குர்ஆனை எந்த நிலையிலும் கையில் எடுத்துப் படித்து சிந்தித்து விளங்கி, செயல்படும் எளிதான சூழ்நிலை உருவாக வேண்டும். அதுவே முஸ்லிம் சமுதாயத்திற்கு ஈடேற்றத்தை - வெற்றியை (நஜாத்) ஈட்டித்தரும். இன்ஷா அல்லாஹ்.